கடவுள் துணை.

இராஜா M. R.
கோவிந்தசாமி பிள்ளை
அவர்கள் மீது

பஞ்சரத்னக் கீர்த்தனம்.

முராஹரிதாஸ் அவர்களால்
இயற்றியது.

சச்சிதானந்தம் பிரஸ்,
விருதுநகர்.
1924
விலை அணா 0—2—0.

Register copy right.

உ

ஸ்ரீராமஜெயம்.

ஓம் சரஹண பவ:

சந்தச் சரப சங்கீத சாகித்ய சமத்கார ராஜபோஜ

ராஜசிங்கம் ராஜா M. R.

கோவிந்தச்சாமி பிள்ளை

அவர்கள்

தேகவ்யோக வைபவ

பஞ்சரத்னக் கீர்த்தனம்.

OFFICE OF THE REGIST... 3 DEC 1348

இஃது

சித்தூர் பஞ்சாயத்துக் கோர்ட் பிரசிடெண்டு ஸ்ரீலஸ்ரீ

கிருஷ்ணசாமி அய்யங்காரவர்கள்

செண்மப்புதூர் ஸ்ரீலஸ்ரீ

ஷெண்பகமுத்து அய்யங்காரவர்கள்

விருப்பத்திற்கிணங்க,

கோலநகர் சமஸ்தானம் என்ற கொல்லபட்டி ஜமீன்

சங்கீத ஸாகித்ய பிடில் வித்வான்

அழகுசுந்தர மாசாரியார் குமாரர்

அரிகதாப்ரசங்க பாகவதர் அழகர்சாமி ஆசாரியார் என்ற

கர்ணாம்ருத கான முரஹரி தாஸ் அவர்களால்

இயற்றி

விருதுநகர் ஸ்ரீமான்

இராமலிங்கங் குருக்களவர்கள்

சச்சிதானந்த அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1924

விலை] [அணா 2.

ரிஜிஸ்தர் காபிரைட்.

நூல் வரலாறு.

நெடியகடல்சூழ்ந்த இப்பூவுலகின்கண் எறும்பு கடையானை முதல் எண்பத்து நான்கு லக்ஷம் ஜீவன்களிலும் மானிட ஜென்மம் உயர்வாகியது. அத்தகைய மானிட ஜென்மம் கிடைப்பதிலும்,

முன்னூல்

பூவினுட் பதுமம்போலும் புருஷருட் டிருமால்போலும்
காவினுட் கற்பம்போலும் கலையினுள் ஞானம்போலும்
ஆவினுட் சுராரன்போலும் அறத்தினில் லறமேபோலும்
நாவினுண்மெய்ம்மைப்போலும் நாட்டினிற் சோழநாடே.

என்றதற்கிணங்க, மகத்தான சோழ நாட்டில் மன்னார்குடியிற் பிறந்து சங்கிதவித்வத்திற் சிறந்து, பாண்டியதேசத்தில் தூத்துக் குடிவாசியாகிய காலஞ்சென்ற ஸ்ரீலஸ்ரீ சங்கரதாஸ ஸ்வாமியின் ப்ரதம சிஷனாகி டிராமாவில் ராஜபார்ட்டில் சிறந்த வித்வானாகி. பிரமா, விஷ்ணு, ருத்ரன் என்ற மூன்றம்சங்களும் மூர்த்திஸ்வரூபமாய் கலியுகவரதனாய் விளங்கும் சுப்ரமண்யனே உண்மையான கடவுள் என்ற தீர்க்க வைராக்கிய முடையவராய், முருகன் கல்யாண குண வைபவங்களான திருவிளையாடலையே நாடக ரூபமாய் நடித்து, யாட்பாணமுதலிய பிரதேசங்களிற்சென்று தங்க மெடல் தோடா பரிசுகள் அடைந்து ஜெயக்கொடி நாட்டி, தென்னாட்டில் பல ஜமீன்களுக்கும் திலகம்போன்ற எட்டையபுரம் மகாராஜ ராஜஸ்ரீ மகாராஜ மான்ய மகாராஜபூஜித மகாராஜா வெங்கடேஸ்வர எட்டப்ப அய்யனவர்கள் ஆசீர்வாதத்தையடைந்து, அதே சமஸ்தானத்தில் கன்னியர்களில் திலகம்போன்ற ஷண்முகவடிவின் அன்பினுக்கீடுபட்டு வாழ்ந்துவருநாளில் கழுகுமலைக்கந்தப்பனுக்கு துன்மதி வருஷம் வைகாசிமீ விசாகத்தில் காவடியெடுத்து பிரார்த்தனை செலுத்தினார். பின்பு முருகனுடைய பக்தி வைராக்ய சித்தராயிருந்தார்; அந்தரலோகஞ்சென்ற மகாராஜா வெங்கடேஸ்வர எட்டப்ப அய்யனவர்கள் அங்குள்ள தேவர்களிடம் பூலோகத்தில் என்னுடைய சமஸ்தானத்தில், சந்தர்சரப சங்கிதசாஹித்ய சமஸ்[illegible] ராஜசிங்கம் ராஜா எம். ஆர். கோவிந்தசாமி என்

பஞ்சரத்னக் கீர்த்தனம்.

பாயிரம்

விருதுநகர், ஸ்ரீமான்

இராமலிங்கக் குருக்களவர்கள் பாடிய

அகவற்பா.

பூமகள்வதனம் போற்பொலிவுற்று
மாமகள் மலர்மகள் மகிழ்ந்து குலாவி
செந்தமிழ்ப் பாடை செயம்பெற வளர்ந்து
வந்திடும் பாண்டி மாநாட்டினிலே
வளமலிந் தோங்கி வனப்புகள் பெற்ற
இளசைவெங்க டேசுரெட் டப்பன்
அரசுசெய்யெட்ட யாபுரத்துயர்ந்த
அரண்மனைவாய லபிமான முற்ற
சந்தச்சரப சங்கீதவித்வ
சுந்தரபுருஷத் தோன்றலாம் யம் ஆர்
கோவிந்தசாமி குவலய நீத்து
தேவேந்திரபதி சென்றதைச் செப்பென
செந்தமிழோம்பும் அந்தணர் குலத்தில்
வந்தவர் சிற்றூர் வாழ்கிஷ்ணசாமி
சென்மப்புதூர்வளர் செண்பகமுத்து
நன்மறையோரிரு பேரு நவின்றிட
மங்களமாக மனமகிழ்ந் தினிதாய்
சங்கீதத்தமி ழாவேசாற்றினன்
கோலநசர்ச்சமஸ் தானவ் குலவிய
சீல்மார்கவிஞன் றிகழ்விஸ்வ மபோன்
கர்ணம்ர்த கானமுராரிதாஸ்
எவ்வுலகோர்க ளியம்பிவழங்கிடும்
அழகர்சாமியாம் அருட்கவி
மழவிடையனடி வணங்கிவாழ்பவனே.

சுபம்! சுபம்!! சுபம்!!!

னும் சங்கீதவித்வான் முருகபக்திவைராக்யன் மகாவித்வான் என்று பிரசங்கஞ்செய்யக்கேட்ட தேவர்களெல்லாம் கழுகுமலைக் கந்தப்பனிடம் ஸ்தோத்ர சிபார்சு செய்தார்கள். முருகபிரானறிந்து மண்டைபிடி யென்னும் நோயை ஷை வித்வானுக்கு உண்டாக்க, இரண்டுமூன்று நாளாகக் கஷ்டப்பட்டு முருகன் சந்நிதானம் செல்லாமல் சொஸ்தமாகாதென்று எண்ணி, கழுகுமலை கந்தப்பன் சந்நிதானஞ்சென்று அதிதீவிரமாய் மானசீக பக்திபண்ணினர்; இரண்டாம் நாள் சொஸ்தமாகியது. ஆகியும், இனி நமக்கு உலகாசையில்லையென்றே நிச்சயித்து, முருகபிரான் கல்யாண குணங்களை இடைவிடாது ஒன்றரை நாள் பாடி முடிந்தவுடன் பக்கத்திலுள்ள யாவரையும்பார்த்து, முருகா! முருகா!! முருகா!!! வென்று மூன்று சப்தம் அழைத்து உடனே தேகவ்யோகமாகி "ஸ்ரீமந் நாராயணன் வாசஸ்தானமாகிய வைகுந்தம் சென்றார்" பின்பு ப்ரிய ஸ்திரீயான ஷண்முகவடிவம்மாள் ஷை கோவிந்தசாமி பிள்ளையை போட்டாரில்வைத்து எட்டையபுரம் கொண்டுவர, "மகாராஜராஜஸ்ரீ மகாராஜபூஜித மகாராஜ மான்ய காசிமகாராஜா அவர்கள் ஷை வித்வான் கோவிந்தச்சாமி பிள்ளை அவர்களைப் போட்டோ எடுத்துக்கொண்டு சற்று நிதானித்து, ஆற்றுமையால் தகனம் செய்யும்படி ஆக்ஞாபித்தார்கள்; அப்படியே நகரவாசிகள் யாவரும் சேர்ந்து, ஷை கோவிந்தச்சாமி பிள்ளையவர்களைத் தகனம் செய்து முடித்தார்கள்." இவ்வித உன்னத பதவியையடைவதற்குங் காரணம் முருகனின் பக்தியே. சுபம்! சுபம்!! சுபம்!!!

உ

ஸ்ரீராமஜெயம்.

ஓம் சரஹணபவ:

சந்தச்சரப சங்கீத சாஹித்ய சமத்கார ராஜபோஜ ராஜசிங்கம்

இராஜா M. R.

கோவிந்தச்சாமி பிள்ளை அவர்கள்

தேக வியோக வைபவ

பஞ்ச ரத்னக் கீர்த்தனம்.

விநாயகர் துதி. - வெண்பா.

ராஜாஎம் மார்க்கோவிந் தச்சாமி யின்புகழைப்
பேசவெந்த னுவிற் பெருகவே—யீசனருள்
புத்திரரில் மூத்த புனிதா வரமுதவு
சித்திக்க ணேசவருள் செய்.

காக்ஷி கண் காக்ஷியே என்ற மெட்டு.

பல்லவி.

தீராத்துயரமே தீரன் கோவிந்த னிறந்தது (தீ

அனுபல்லவி.

பாரினர்புகழ ராஜ பார்ட்டிலிவர்க் கீடில்லையால் (தீ

மகுடம்.

திக்கெட்டினுமே ஜெ யக்கொடி நாட்டியோன்
அக்க கனத்தர் அழைக்கச் சென்றனன் (தீ
இம்மாநிலமதனில் எம்மாரெனு மவன்போல்
அம்மா இனிக்காணப்போ கும்மா அடடடடா (தீ
சிங்க லக்கனத்துற்ற சிங்கஞ் சங்கீத கவிச்
சிங்கம் ராஜபோஜ சிங்கங் கோவிந்தச்சாமி
சிங்கம் இல்லாதது (தீ

சரணம்

மன்னார்குடியிற்பிறந்த   மாக்கனதன புண்யன்
மாநிலம் புகழும் எட்டப்   பன் பதியில்வாழ் கண்யன்
எந்நாளுங் கழுகுமலை   எந்தையாம் சுப்ரமண்யன்
இருதாளிணைச் சிரமீ   தேயிருத்திய ரமண்யன் (ஸ்ரீ

யாட்பாண் மைசூர் மலையா   ளஞ்சேது சமஸ்தானம்
யாவினராலும் மெடல்தோ   டாசர்ட்பிக்கெட் சன்மானம்
கேட்பதில்லாமற்படி   கிடைக்கப்பெற்றிடுங் கானம்
கிட்ட இன்பவாசம்   கொட்டியோனின் னபிமானம் (ஸ்ரீ

காரணந் தலையிடியாற்   கவலைமிகக் கொண்டான்
கந்தனரு ளிதெனக்   கருத்தினிற் றிடங்கொண்டான்
வேறெவ்விதத்தாலுந்தீராதென்னமதித்துக்கொண்டான்
வேலனிடமானசீக   விண்ணப்பமிட்டுக் கொண்டான் (ஸ்ரீ

விரைவிற் கழுகுமலை சென்றான்   சங்
கரனருள் குமரர் கா வென்றான்   குரு
பரனுனது தஞ்சமென்றான்   ஏழு
சுரலயமொடு பாடி நின்றான்

சொர்க்கலோகஞ் சென்றான்   சக்கரன்னேர் நின்றான்
சுரசகமகிழ் கர்ணாம் ருதகான முராஹரி
திரமா னதித்தமிட்டா சுரமகிமையாலறி (ஸ்ரீ

தீண்டக்கூடாதாம் என்ற மெட்டு.

கோவிந்தச்   சாமி   மறக்கு
மா இந்தப்   பூமி

சந்திச்சரப சங்கீத   சாகித்ய ஸமர்த்தர்
விந்தைக் கவிராஜபோஜ   ராஜசிங்கமான எம்மார்

கோவிந்தச்   சாமி   மறக்கு
மாயிந்தப்   பூமி

மன்னார்குடியிற் பிறந்து   தென்னிளமையில் வாழ்ந்து
இன்னிலத்தினர் புகழ   எழில் ட்ராமா நடத்திவந்

கோவிந்தச் சாமி மறக்கு
மா யிந்தப் பூமி
சங்கரதாஸஸ்வாமியாம் சற்குருவின் சீஷனாகி
மங்காத கீர்த்திவாய்ந்த மாகனதன சிலாக்கிய
கோவிந்தச் சாமி மறக்கு
மா யிந்தப் பூமி
நாரியர் சிகாமணியாய் நான்கு குணமும் பொருந்தும்
காரிகை சண்முகவடிவை கலந்தணைந்த சுகமறந்த
கோவிந்தச் சாமி மறக்கு
மா யிந்தப் பூமி
அட்டதிக்கெலாம் புகழும் எட்டப்ப னாசீர்வாதத்தை
கட்டழகா சிரமேற்கொண்டு அட்டகாசம் செய்துவந்த
கோவிந்தச் சாமி மறக்கு
மா யிந்தப் பூமி
யாட்பாண நகரத்திலே யாவருங் கொண்டாடத் தக்க
பேர்ப்ரவலமும் மெடல்தோ டாப்ரசண்டும் வாங்கிவந்த
கோவிந்தச் சாமி மறக்கு
மா யிந்தப் பூமி
ஆக்ட்டுசெய்யும் போதுசில ராக்ஷேபச் செய்திகளை
பாக்கெட்டுக்குள் ளடக்கஞ்செய்து பதிலுறைப்பாருஞ்போ
கோவிந்தச் சாமி மறக்கு [லுண்டோ
மா யிந்தப் பூமி
ஒவ்வொரு சரித்திரத்துக் குற்ற சக்ரவர்த்தியென
அவ்வைமுதற் குழவியரும் ஆற்றுமை கொளத்தகுந்த
கோவிந்தச் சாமி மறக்கு
மா யிந்தப் பூமி
தேசாதேசங்கள் சென்று ஜெயக்கொடி நாட்டிவந்த
ராஜா எம்மார்கோவிந்தச் சாமி வைகுந்தம்சென்றுபோ
கோவிந்தச் சாமி மறக்கு
மா யிந்தப் பூமி
கனவிலுங் கழுகுமலைக் கந்தப்பாகந் தப்பாவென்று
அனவரதமுந் தொனிந்து ஆனந்தபா[illegible]வ வாழ்ந்த

கோவிந்தச் சாமி மறக்கு
மா யிந்தப் பூமி
இந்தவித மாயுலகில் எல்லாருங் கொண்டாடவே
அந்தார் கவலைகொண்டு ஆறுமுகத்தைப் பார்த்தாரோ
கோவிந்தச் சாமி மறக்கு
மா யிந்தப் பூமி
அன்யாயமாக வுனக் காகாமண்டையிடியைச்
சன்யாசி வேஷங்கொண்ட சண்முகனுறச் செய்தானோ
கோவிந்தச் சாமி மறக்கு
மா யிந்தப் பூமி
நாளிரண்டு மூன்றுகவே நல்ல அவிழ்தங்கள் செய்தும்
பாழான மண்டையிடி பாட்டுக்காசைப் பட்டனவோ
கோவிந்தச் சாமி மறக்கு
மா யிந்தப் பூமி
மோட்டாரைக் கொண்டுவரக் கேட்டதின்மீ தேறிக் கொண்டு
காட்டாணமுகன் தம்பியின் தேட்டமாக நீசென்றாயோ
கோவிந்தச் சாமி மறக்கு
மா யிந்தப் பூமி
பஞ்சபூத சாட்சியாக பன்னிருகையனை நினைந்து
தஞ்சமெனையாட்கொளென்று சந்நிதானத்தின் முன்னின்ற
கோவிந்தச் சாமி மறக்கு
மா யிந்தப் பூமி
சண்முகா சண்முகா சண்முகா சச்சிதானந் தாவெனவே
கண்ணீராறுகப் பெருக்க கந்தப்பனிடம் பாடிய
கோவிந்தச் சாமி மறக்கு
மா யிந்தப் பூமி
மாமனிடமேகோவிந்தச் சாமி நீ சென்றே வுன்னத
க்ஷேமமடைவாய்வைகுந்தம் செல்லெனஅனுப்பினாரோ
கோவிந்தச் சாமி மறக்கு
மா யிந்தப் பூமி
ஜீவாத்மாவும் வைகுந்தம் சென்றுவிடவே தேகத்தை
ஆவலாகவேமோட்டாரில் அன்புடன்கொண்டுவந்தாரோ

181062

கோவிந்தச் சாமி மறக்கு
மா யிந்தப் பூமி

காசிமகாராஜா திருக் கண்பார்வையே சாதித்து
ஆசையுடனே போட்டகிருப் யானெடுத்துக்கொண்டேனென் (றல்

கோவிந்தச் சாமி மறக்கு
மா யிந்தப் பூமி

எட்டப்பன் வைகுந்தமதி விருந்து சங்கீத வாசைப்
பட்டுனே யழைத்துக்கொண்ட பாவனையாகு மிதுவே

கோவிந்தச் சாமி மறக்கு
மா யிந்தப் பூமி

எட்டயபுரங் கொண்டுவந் திட்டார் தருணம் செய்ய
துஷ்டநிக்ர ஹவதாரத் தோன்றலான ராஜா எம்மார்

கோவிந்தச் சாமி மறக்கு
மா யிந்தப் பூமி

கோவிந்தா கோவிந்தாவென்று கூச்சலிட்டழும் ஜனங்கள்
தாபந்தீராமற் கோவிந்தச் சாமி வைகுந்தம் சென்றுயோ

கோவிந்தச் சாமி மறக்கு
மா யிந்தப் பூமி

முப்பத்துமுக்கோடிதேவர்கள்நாற்பத்தெண்ணாயிரம்ரிஷிகள்
எப்போது முன் கானங்கேட்டிருக்கவழைத்தனரோ

கோவிந்தச் சாமி மறக்கு
மா இந்தப் பூமி

சந்தச்சரப சங்கீத சாகித்ய கர்ணும் ருதகா
னந்திகள் முரஹரிதா சன் தமிட்டிறமிதாமே (கோ

இன்னம் பராமுகமா ராமா என்ற மெட்டு.

சங்கீத சாகித்ய சம் பன்னன் ட்ராமர்
சாரமறிந்துயர் விற் பன்னன் நீர்
சந்தச்சரபராஜபோஜ சிங்கம்
எந்தத்தேசத்து மாற்றுயர்ந்த தங்கம்

பார்ப்பாணம் சங்கமதிற் சென்று சர்வத்
திசாளும் சபாஷெனப் புகன்று தோ
டாமெடல் சன்மானங்கள் மிக வாங்கி
க்ஷேமாதி க்ஷேமமுற் றிடும்வாழ் வோங்கி

தென்னாட் டெட்டயபுரம் வந்து செல்வ
ஸ்திரீயாம் ஷண்முகவடிவைச் சேர்ந்து பல
தேசங்கள்சென்று ஜெயக்கொடி நாட்டி
ராஜா எட்டுவெங்க டேஸ்பரன் பேட்டி

கண்டானந்தங் கொண்டிருந் தானே சொந்தக்
கந்தன் பக்தியிற் சிறந் தானே விசா
கர்காவடியெடுத் துக்கீர்த்த னம்பா
டிக்கழுகுமா மலைக்கதி பன்பா

தாரவிந்தங் கொண்டுசேர்ந் தானே வந்
தாளென்னவே கைகுவித் தானே அப்போ
அந்தரத் தேவர்களுமாசை கொண்டார்
கந்தனிடம் சிபார்சும்துதி விண்டார்

பஞ்சாட்சர ப்ரபலன் கண்டு ஒரு
பாயஞ்செய மனத்துட் கொண்டு தலைப்
பாரமா மண்டையிடியைக் கொடுத்தான்
தீரன்கோவிந்தச் சாமியுந் துடித்தான்

முருகா முருகாவென்று நொந்தான் ரெண்டு
மூன்று நாளாக மனங் கரைந்தான் திரி
மூர்த்திஸ்வரூபமான முருகையா
கார்த்திகேயா யெனைக் காவா வேலய்யா

என்றே கழுகுமலை சென்றான் குகா
யேனோ இன்னமும் பாரக் கென்றான் நாளி
ரெண்டுக்குளே சுகமாகின தின்பின்
கண்டா னினிப்பிழை யோமென அன்பின்

ஒன்னரை நாளாகப் பாடி நின்றான் தன்னை
ஒப்புக்கொள்ளல் வசித மென்றான் விழித்

தோலவிட்டே முருகா முருகா பென்
பாலருள்செய் சண்முகா சண்முகா என்
றனந்தமாய் வைகுந்தம் சேர்ந்தான் நா
ராயணன் பாதமதைச் சார்ந்தான் ஆ ஆ
யார்க்குக் கிடைக்கு மிந்தப்படி யோகம்
யார்க்குட் காசனம் பக்தியே வை போகம்
ஷண்முக வடிவாகிய மாது தேகந்
தன்னைக் காரிற்கொண்டுவரும் போது கண்ட
சர்ஜனசர்வந் திராளுங் கோவிந்தா வென்
றுச்சரித்தார் ஒரு முகூர்த்தந்தா னின்
றுகிவிசைவா யிஎசை வந்தார் கண்ட
யாவருமே மனது நொந்தார் மகா
ராஜா காசிப்பாண்டி யன்போட்டோ எடுத்து
பேஷப்பா என்றுந்தரவு கொடுத்து
கோவிந்தசாமியை தகனஞ் செய்யுஞ்
கோலவன் றுந்தரவாகவே நம் சற்
குண எம்மானைத் தகனஞ் செய்தார்கள்
தனகனமுபரப்பதி போகள்
கர்ணம்ருத கானமுர ஹரி தாசன்
களாறுந்தமிட் பாவிதுவாரம் விரி கிறைக்
கடல்சூழ் வைபகந் தடல்பொரு ளாலித்
திடமுதவு முருகனைச் சேவி சங்

18062

கண்ணபிரான் – என்ற மெட்டு.

ஆச்சரியம் ராஜசிங்கம் எம்
மார் கோவிந்தச் சாமி கா
லஞ்சென்றதைக் கேண்மி ரா
வாயிரத்தோ றெனுஞ்சொல்ல லாகாதென்றோர் ஜாபின்
ஆணுயும் ஒரு நாளுள் ளோன் யான்
சொல்லுவதைக் கேளும் சொக்

ஸரதாற்பாவஞ் சூழும் என்
ஞப்தநண்பனென்று சொல்ல லானேனிந்த நாளும்
குவலயந் தனிலேழன்னர்
குடியினிற் பிறந் தோன் சற்
குணமதிற் சிறந் தோன் எக்
குறையிலாது சாஸ்த்ரங்களிற் கும்பனெனத் தேர்ந்தோன்
சங்கிதத்தில் வல்லவனாப்
சர்ஜனர் கொண் டாட ச
தானந்தமாய்ப் பாட சுப்
ரமணியபக்தி வைராக்ய சம்பத்தென்றும் நீட
சங்கரதாச ஸ்வாமியை
சற்குருவாய் நம்பி ட்ரு
மாணந்தந்த தும்பி சிவ
சண்முகன் ப்ரபாவத்தை சதாஜெகத் தியம்பி
ட்ராமா ராஜபாட்டில் அதி
நிரனெதிரில் லான் வி
சித்திரச் செஞ்சொல் லான் ஜெய
சிங்கமெனப் பெயர்வாய்த்ததே சந்தும்சென்ற வல்லான்
நாவலர்வசிக்கும் யாட்பா
ணந்தருங் கொண் டாட மெ
டல்தோடாக்கள் போட அ
நர்கரீகமாகிய ட்ராமாவினர்கள் டோட
சந்தர்சாபசங்கித
சாகித்யசமத் காரன் போஜ
ராஜசிங்க வு தாரன் கோவிந்
தசாமியெனும் பேர்கொண்ட சம்ப்ரம கெம்பீரன்
இன்னிசைவெங் டேசுரெட்டப்
பய்யனவர்கள் பேட்டி கிட்
டப்பரத மூட்டி கோ
விலன் சரித்ரமதில் தனக்கிணை யில்லையெனும்பேர் நாட்டி
கணக்கிலாத ஸன்மானங்கள்
கண்ணியனும் பெற்றான் மூரு

கபிரானரு ளுற்றான் சதா

காலமும் வசிப்போமென்ற காதலாலுங் குற்றான்

சண்முகவடிவெனுஞ் சற்

குணவதியைக் கண்டான் அரு

குறப்பிரியங் கொண்டான் நீயே

சாஸ்வதம்விலகேனென்ற சங்கதியும் விண்டான்

இந்தவிதமாக வாழ்ந்தி

ருக்கும் நாளையிலே ஸ்ரீ

சாருகைய ணாலே தலை

யிடியெனும் நோயால்வருந்தி இரண்டு நாளின் மேலே

கந்தப்பன் பாதாரவிந்தங்

கண்டாலன்றி நீங்கா ஆ

கையாற்காரிற் பாங்கா ஏறிக்

கழுகுமாமலையனைக் கண்டானந்தமே மேலோங்க

அறிவெனும் ஞானக்கயிற்று

லறுமுகனைக் கட்டி தா

லைவலியைவி ரட்டி என்னை

யாதரிப்பாயெனவேசுக மாக்கினானே செட்டி

அய்யாமுரு கையாமுரு

கையாவென்றே யாடி ஒன்

றைநாளாய்க் கொண் டாடி பிணி

யாம்பிழையோ மெனயிருகை யாற்கண்டானே நாடி

அந்தரலோகஞ் சென்றுவை

குந்தநாதன் பாதம் கண்

டானந்தநற் போதம் மே

லானசாயூஜ்யபதம் பெற் றானென்றே இங்கிதம்

கர்ணாம்ருத கானமுரா

ஹரிதாசன் பாடும் கீ

தாசாரமன் போடும் கேட்

டாலரி திருவருளொன்னாளுமே ணைகூடும்

நொண்டிச்சிந்து.

மாகனதனவான்களே — கேளும்
மானிலத்திற் சென்னைராஜதானியிலுள்ள
தேசாதேசங்களிலே — சோழ
தேசமா மன்னார்குடியில் வாசமே செய்தோன்
சங்கீதந் திறமையுள்ளான் — நாளும்
சண்முகநாமத்யானமே உண்மையா யுள்ளோன்
சங்கரதாச ஸ்வாமியின் — வித்வத்
தன்மையினாலே டிராமாவிற் பன்னாளாகியே
ராஜபார்ட்டி னிற்சிறந்தோன் — நிக
ராகார்யாவரும்என விவேக மிகுத்தோன்
எட்டயபுரம்வந்து — மகாராஜா
எட்டுவெங்க டேசன் அன்பேற் பட்டிருக்கையில்
சண்முகவடிவென்னும் — ஸ்திரீயைச்
சார்ந்து இந்த்ரன் இந்த்ராணிபோற் சேர்ந்து சுகித்தான்
தேசாதேசங்கள் சென்றான் — தங்கந்தோ
டாமெடல்பரிசுபெற்று றுபேர்மிகுக்க
இவ்விதம் வாழ்ந்திருந்தான் — விண்ணோர்
யாவரும் ஒன்றாகக்கூடிப் பூவுலகுள்ள
கோவிந்தனை யிங்கழைத்துக் — கொள்ளக்
குமரன் குருபரனுக் கமரர் துதி
செய்திட முருகன் கண்டு — இதற்
கென்னசெய்வ தெனவெண்ணி வன்னமயிலோன்
மண்டையிடியாம் நோயை — இந்த
மானிலத்திற் கோவிந்தனுக் கேனியமித்து
நாளிரண்டு மூன்றாகி — சகியா
னாகி அப்பனின்சன்னிதி யகினாலன்றி
திருதெனவே நினைத்து — காரில்
தீரனேறி சண்முகனைக் கோரித் துதித்து
சந்நிதானத்தை யடைந்து — நின்று
சண்முகாகா சண்முகாகா சண்முகா வென்று

தோத்திரப்பாக்கள் பாடிக் — கோவிந்
சொர்க்கலோகத்தே நாரணன் பக்கமடைந்தான்
ஜீவன் பிரிந்தவுடனே — ஆப்த
ஸ்திரீயாம் சண்முகவடிவா ளோயா தழுதாள்
கார்கொண்டு வரச்சொல்லி — ப்ராண
காந்தனைக்கார் மீதுவைத்துச் சாந்தமுடனே
கொண்டவள் வரும்போது — எல்லாரும்
கோவிந்தா கோவிந்தா வென்று மாவிந்தையோடு
ஆருந் துயர முற்றனர் — வீரை
வாக யெட்டயபுரத் தநேகருங்கண்டு
கோவிந்தா கோவிந்தா வென்றார் — இளசைக்
கோமான் காசிமகாராஜா ப்ரேமையுடனே
போட்டோக்ராபரை யழைத்து — திவ்ய
போட்டோ யெடுத்தெம்மாரேவுன் பாட்டுக்கென் செய்வேன்
என்று கோவிந்தச் சாமியை — தகனம்
ஏற்பாடுசெய்யுங்களென ஆர்ப்பாட்டமுடன்
தகனமும் செய்துமுடித்தார் — இந்த
சங்கதி முரஹரிதாசன்கவி கூறும் — மாகண
(தான்த்தந் தனனனனே

இராகம்—பிலகரி. தாளம்—ரூபகம்.

ரேங்கநாயகமே என்ற மெட்டு.

சச்சிதானந்தம் — ப்ரஸ்
அகிலந்தனிலே யாவரும்புகழ் சம்ப்ரமமா விருதையிலுறும் (சச்
அக்ஷரவழுவிலாமலே — மகா
லக்ஷணக் கவியின ரெலாம் — புக
முச்சித்ர மயிலவனி — ணக
மெச்சுவிசித்திர பிலகரி — ராக (சச்

தொகையரு
எழுத்தொடு சொற்பொருள் யாப்பு அணியென்
றிடும் பஞ்ச லக்ஷணத்தால்

இயலிசை நாடகம் ஆசுமதுரம் சித்திரம் விஸ்தா
ரப்ரபந்தம்
வழுத்துவார் புகழ்பர்வ லோடருட் கவிகளின்
வாக்சாதுர்யம தறிந்தும்
வகையுறச்செய்ராம லிங்கக்குருக்களால் வரைந்
தச்சியற்றி யுதவும்
வண்ணமிரண்டாறு கண்ணனருள் வாழி
எண்ணி நாளுந்துதி பண்ணுவரும் வாழி
என்றும் நீடூழி வாழியே
நன்று முராஹரியின் மொழியே (சச்சி

முற்றுப்பெற்றது.

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

அய்யன்மீ ரன்பீரெம் மார்தெய்வீ கக்கீதம்
செய்தச்சா கிரிஜிஸ்டர் செய்துளதால்—வையமிசை
யாதொருவ ரச்சிடக்கூ டாதெமது ஆடரின்றி
ஓதுமுரா ஹரிசொ லுணர்வீர்.